RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-98 | 15 ஏப்ரல் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ‘சொன்னதை செய்துவிட்டார் பிரதமர் மோடி’ சோக்ஸி கைது குறித்து மத்திய அமைச்சர் கருத்து

புதுடெல்லி, ஏப்.15

ஏழைகளிடமிருந்து பணத்தை கொள்ளையடித்தவர்களை பிரதமர் மோடி விட்டுவிடமாட்டார் என நிதி மோசடியில் தொடர்புடைய வைர வியாபாரி மெகுல் சோக்ஸி கைது குறித்து மத்திய இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.





2021 ஆம் ஆண்டில், பிரதமர் மோடி, மத்திய விஜிலென்ஸ் கமிஷன் (சிவிசி) மற்றும் மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ) ஆகியவற்றின் கூட்டு மாநாட்டில் உரையாற்றினார். அப்போது ஏழைகளை ஏமாற்றுபவர்கள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்” எனக் கூறியிருந்தார்.

இதனிடையே, பிரதமர் மோடி மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மேற்கோள் காட்டி, “மத்திய இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி கூறியதாவது, ஏழைகளிடமிருந்து பணத்தை கொள்ளையடித்தவர்களை பிரதமர் மோடி விட்டுவிடமாட்டார். நாட்டில் ஏராளமானோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது மெகுல் சோக்ஸி கைது செய்யப்பட்டுள்ளார். இது மிகப் பெரிய சாதனை.” என்றார்.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் ரூ.13,500 கோடி நிதி மோசடியில் தொடர்புடைய வைர வியாபாரி மெகுல் சோக்ஸி, பெல்ஜியத்தில் அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தியாவின் நாடு கடத்தல் தொடர்பான கோரிக்கையை ஏற்று கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது ஜாமீன் மனு மீதான விசாரணை ஒரு வாரத்துக்கு பிறகு நடைபெற உள்ளது. இடைப்பட்ட காலத்தில் அவர்

## திராவிட மாடல் பயணத்தில் அம்பேத்கர் விரும்பிய சமத்துவ இந்தியாவை கண்டே தீருவோம்: முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஏப்.15

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலக்கை நோக்கிய நமது திராவிட மாடல் பயணத்தில், அம்பேத்கர் விரும்பிய சமத்துவ இந்தியாவை கண்டே தீருவோம் என்று சமத்துவ நாளை ஒட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் ஏப்ரல் 14ம் தேதி சமத்துவ நாளாக கொண்டாடப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022ம் ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்தார். அதன்படி இன்று தமிழகத்தில் சமத்துவ நாள்



கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நிலையில், சமத்துவ நாளை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “சாதி எனும் ஆயிரமாண்டு அழுக்கினை அறிவெனும் தீப்பந்தம் கொண்டு பொசுக்கிய புரட்சியாளர் தனக்குவமை இல்லாத புத்துலகப் புத்தர் சட்ட மாமேதை அம்பேத்கர் பிறந்தநாள், சமத்துவ நாள்.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நம் பயணத்தில் என்றும் நம்மை வழிநடத்தும் அறிவுலகச் சூரியன் அம்பேத்கர் வாழ்க!


‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலக்கை நோக்கிய நமது திராவிட மாடல் பயணத்தில், பாபாசாகேப் விரும்பிய சமத்துவ இந்தியா கண்டே தீருவோம்! ஜெய் பீம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

## காங்கிரஸை ‘வாக்கு வங்கி வைரஸ்’ தாக்கியுள்ளது வக்பு சட்ட விவகாரத்தில் பிரதமர் மோடி தாக்கு

புதுடெல்லி, ஏப்.15

அண்மையில் நிறைவேற்றப்பட்ட வக்பு சட்ட திருத்த மசோதாவை காங்கிரஸ் கட்சி எதிர்க்க காரணம் ‘வாக்கு வங்கி’ அரசியல்தான் என பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார். காங்கிரஸை வாக்கு வங்கி வைரஸ் தாக்கியுள்ளதாக அவர் விமர்சித்துள்ளார். மேலும், அம்பேத்கரின் சமூக நீதியை தங்களது சுய லாபத்துக்காக காங்கிரஸ் கட்சி குலைத்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹரியானாவில் ஹிசார் விமான நிலைய திறப்பு விழாவில் பங்கேற்று பிரதமர் மோடி பேசுகையில்,



“ஆட்சி அதிகாரத்தை பெறுவதற்கான அஸ்திரமாக புனிதமான அரசியலமைப்பை பயன்படுத்தியது காங்கிரஸ் கட்சி. ஆட்சி அமைக்க முடியாது என உணர்ந்த போதெல்லாம் அதை காங்கிரஸ் கட்சி செய்துள்ளது.

இந்திய சமூகத்தில் சமத்துவத்தை அம்பேத்கர் எதிர்பார்த்தார். ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் என அனைவரும் கண்ணியத்துடனும், தலை நிமிர்ந்தும் வாழ வேண்டும் என்ற கனவினை கொண்டிருந்தார் அம்பேத்கர். ஆனால், காங்கிரஸ் கட்சி அதை குலைத்தது.


இஸ்லாமியர்கள், பட்டியலின மக்கள், பட்டியல் பழங்குடியின மக்கள், இதர பிற்படுத்தப்பட்ட மக்களை நாட்டின் 2ம் தர குடிமக்களாகவே காங்கிரஸ் கட்சி கருதியது. அந்த கட்சியின் தலைவர்கள் நீச்சல் குளத்தில் நீராடி மகிழ்ந்தனர். அதே நேரத்தில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பு குறித்து கண்டும் காணாமல் இருந்தனர்.

ஏழைகள் நலன் மற்றும் சமூக நீதியை உறுதி செய்ய மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. வக்பு வாரியம் வசம் லட்சக்கணக்கான ஹெக்டேர் நிலங்கள் உள்ளன. உண்மையாகவே அந்த சொத்துகளின் சலுகைகள் தேவைப்படுபவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், நிச்சயம் அது அவர்களுக்கு பயன் தந்திருக்கும். ஆனால், நில மாஃபியாக்கள் தான் இந்த சொத்துக்களால் பயனடைந்தனர்” என்றார்.

## ‘பாஜக கூட்டணியால் கட்சியிலிருந்து நான் விலகுவதாக பொய்ப் பிரச்சாரம்’ ஜெயக்குமார் கண்டனம்

சென்னை, ஏப்.15

பாஜக கூட்டணி அமைந்தால் கட்சியிலிருந்து விலகுவதாக திட்டமிட்ட பொய்ச் செய்தி பரப்பப்படுகிறது. நான் எந்த நேரத்திலும் அவ்வாறு சொல்லவே இல்லை. இது திட்டமிட்ட ஒரு பொய் செய்தி. இதுபோன்ற பொய்ச் செய்திகளைப் பரப்பி அற்ப ஆசை கொள்ள வேண்டாம், என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.



சென்னையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் இன்று (ஏப்.14) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், அதிமுக பாஜகவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது, என்று விசிக தலைவர் திருமாவளவன் விமர்சனம் செய்திருப்பது தொடர்பாக கேள்வி எழுப்பப் பட்டது. அதற்கு பதிலளித்த அவர், “பாஜக கூட்டணி அமைந்தால் கட்சியிலிருந்து விலகுவதாக கூறினாரே என்று சொல்லி திருமாவளவன் அவருடைய கருத்தை கூறியிருக்கிறார்.

நான் எந்த நேரத்திலும் அவ்வாறு சொல்லவே இல்லை. இது திட்டமிட்ட ஒரு பொய் செய்தி. இதை திட்டமிட்டு பரப்பி, நான் ஏதோ கட்சியில் இருந்து விலகுவதாகவும் கூறியதுபோல சொல்லப்படுகிறது. நான் எப்போது அவ்வாறு கூறினேன்? அதாவது நான் சொல்லாத, நினைத்துக் கூடப் பார்க்காத செய்தியை, கடந்த 4 நாட்களாக வேண்டுமென்றே சமூகவலைதளங்களில் பரப்பி வருகின்றனர். இந்த செய்தியை பரப்பியதன் மூலம் சில யூடியூப் சேனல்களுக்கு என்னால் ஒரு வருமானம் கிடைத்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

எங்களுடைய குடும்பம் ஒரு திராவிடக் குடும்பம். எனது தந்தை இந்தி எதிர்ப்புப் போராட்டம், சுதந்திரப் போராட்டம், முன்னாள் முதல்வர் அண்ணாவால் அடையாளம் காட்டப்பட்டு, மாநகராட்சித் தேர்தலில் இடம் கொடுத்து, கவுன்சிலராக இருந்து, நிலைக் குழுத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். துணைத் தலைவராக எம்ஜிஆர் காலக்கட்டத்தில் எனது தந்தை உறுப்பினராக இருந்துள்ளார். அப்படி ஒரு நீண்ட நெடிய திராவிட பாரம்பரியம் எங்களுடையது.

தன்மானத்துடன் வளர்ந்த குடும்பம். பதவிக்காக சென்று யார் வீட்டு வாசலிலும் சென்ற வரலாறு எங்களுடைய குடும்பத்துக்கும், எங்களுக்கும் கிடையாது. அதிமுக என்னை அடையாளம் காட்டியது. ஒரு அந்தஸ்தைக் கொடுத்தது. எனவே, என்னுடைய வாழ்நாள் முழுவதும் பெரியார், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா வழியிலே எங்களது பயணம் நிச்சயமாகத் தொடரும். எனவே, இதுபோன்ற பொய்ச் செய்திகளைப் பரப்பி அற்ப ஆசை கொள்ள வேண்டாம். யார் வீட்டு வாசலிலும் சென்று பதவிக்காக நின்றவன் ஜெயக்குமார் கிடையாது” என்று அவர் கூறினார்.

## கொடுங்கையூர் எரி உலை திட்டத்துக்கு எதிர்ப்பு மே 25ல் மனித சங்கிலி போராட்டம் நடத்த முடிவு

சென்னை, ஏப்.15

கொடுங்கையூர் எரிஉலை திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, வரும் மே 25ம் தேதி மனித சங்கிலி போராட்டம் நடத்தப்படும் என வட சென்னை குடியிருப்போர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வட சென்னை குடியிருப்போர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், கொடுங்கையூரில் அமையும் எரிஉலை திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த கருத்தரங்கம் சென்னை கொடுங்கையூரில் நேற்று நடைபெற்றது.

இதில் நீரியல் நிபுணர் எஸ்.ஜனகராஜன் பங்கேற்று பேசியதாவது: வட சென்னையில் ;செயல்பட்டு வரும் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், உர தொழிற்சாலைகள், அனல்மின் நிலையங்களால், இப்பகுதி மக்களுக்கு நுரையீரல் சார்ந்த பிரச்சினைகள் அதிகமாக உள்ளன. மண்ணில் பாதரசம் அதிகமாக உள்ளது. குப்பையை எரித்து மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் உலக அளவில் மூடப்பட்டு வருகின்றன. எரித்து விட்டால் எல்லா கழிவுகளும் காணாமல் போய்விடுகிறது. மின்சாரமும் கிடைக்கிறது



என்பது குறுகியகால தீர்வாக மட்டுமே இருக்கும்.

இப்போது நாளொன்றுக்கு 2100 டன் குப்பையை எரிப்பதாக திட்டத்தை தொடங்குவார்கள். பின்னர் அது, 6 ஆயிரம் டன்னாக உயரும் மக்காத குப்பையை மறு சுழற்சி செய்ய ஏராளமான விழிமுறைகள் இருந்தும், குப்பை எரிப்பது சோம்பேரித்தனமான திட்டம். வட சென்னையில் மக்கள் சுற்றுச்சூழல் நீதியை பெற போராட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டமைப்பின் தலைவர் டி.கே.சண்முகம் பேசும்போது, “கொடுங்கையூரில் குப்பை எரிஉலையை செயல்படுத்தினால், வட சென்னை விஷமாக மாறிவிடும். மக்களை கொன்று செயல்படுத்தப்படும் வட சென்னைக்கான வளர்ச்சி திட்டம் தேவையில்லை” என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கவுன்சிலர் ஆர்.ஜெயராமன் பேசும்போது, மேயர் ஆர்.பிரியாவை சந்தித்து, கொடுங்கையூர் எரிஉலை திட்டம் வேண்டும் என்று வலியுறுத்தியபோது, அரசின் கொள்கை முடிவு என்றார். அரசின் கொள்கை முடிவு மக்கள் நலன் சார்ந்து தானே இருக்க வேண்டும்“ என்றார்.

காங்கிரஸ் கவுன்சிலர் ஜெ.டில்லிபாபு பேசும்போது, புதிய தலைமைச் செயலகத்தை, கொடுங்கையூர் குப்பை கிடங்கில் அமைக்க வேண்டும். அப்போதுதான் வடசென்னை வளர்ச்சி பெறும். எரிஉலை திட்டம் வேண்டாம் என முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வலியுறுத்துவோம்“ என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கவுன்சிலர் ரேணுகா பேசும்போது, நான் மாநகராட்சி மன்ற நிலைக்குழுவில் (சுகாதாரம்) இருக்கிறேன். எரிஉலை திட்டம் எங்கள் அனுமதிக்கே வரவில்லை” என்றார்.

மதிமுக கவுன்சிலர் ஜீவன் பேசும்போது, எரிஉலை திட்டத்தின் சாதக, பாதகங்கள் குறித்து, வடசென்னை குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்த மாநகராட்சி ஆணையர் திட்டமிட்டுள்ளார். அதே நேரத்தில், ஆன்லைனில் உணவு ஆர்டர் செய்யாமல், வீட்டிலேயே உண்ண பழகி, குப்பை உருவாவதை குறைக்க வேண்டும்“ என்றார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில், “கொடுங்கையூர் குப்பை மேட்டை அகற்ற வேண்டும். கொடுங்கையூர் எரிஉலை திட்டத்தை கைவிட வேண்டும். தற்போது கொடுங்கையூர், சின்னமாத்தூரில் செயல்பட்டு வரும் எரிஉலைகளை மூட வேண்டும். இவற்றை வலியுறுத்தி மே 25ம் தேதி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் மனித சங்கிலி போராட்டம் நடத்தப்படும்“ என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பாஜக அதிமுக கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது- வானதி சீனிவாசன் நம்பிக்கை

கோவை, ஏப்.15

“பாஜக அதிமுக கூட்டணி, திமுக அரசை வீட்டுக்கு அனுப்புவது என்ற ஒற்றை குறிக்கோளோடு செயல்படுகிறது. கூட்டணியில் எந்த பிரச்சினையும் ஏற்படாது” என்று, அக்கட்சியின் தேசிய மகளிர் அணி தலைவர் மற்றும் கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏ வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.



அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை வடகோவை மத்திய உணவு பொருட்கள் சேமிப்பு கிடங்கு வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு வானதி சீனிவாசன் இன்று (ஏப்.14) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள். அம்பேத்கார் பிறந்தநாளை முன்னிட்டு சிலை அமைந்துள்ள பகுதிகளில் தூய்மை பணி செய்து விளக்குகளால் அவரின் படம் அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. கட்சியின் முக்கிய தலைவர்களும் நிர்வாகிகளும், தொண்டர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஏப்ரல் 15ம் தேதி முதல் 20ம் தேதிக்குள் ஒரு நாள், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரங்க கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை அம்பேத்கரை, காங்கிரஸ் கட்சி அவர் உயிரோடு இருந்த போது பலவகைகளில் அவமரியாதை, துரோகம் செய்தது. அன்றைய பிரதமர் நேரு, அம்பேத்கரின் புகழை குறைக்க பார்த்தார். ஆனால் பாஜக அவர் பிறந்த இடம், லண்டனில் அவர் படிக்க சென்ற இடம், அவர் உயிர் நீத்த இடம், தீக்ஷா பூமி என்று அவர் புத்த மதத்திற்கு மாறிய இடம், இறுதியாக அவர் எரியூட்டப்பட்ட இடம் உள்ளிட்ட ஐந்து இடங்களில் கோடிக்கணக்கில் நிதி செலவிட்டு மணிபண்டபம் அமைத்து புகழை உலகம் முழுவதும் எடுத்துச் செல்கிறது.

பிரதமர் மோடி, டாக்டர் அம்பேத்கருக்கு மரியாதை செய்ய வேண்டும், அவரை கவுரவப்படுத்த வேண்டும் என்பதற்காக நாட்டின் பண பரிமாற்ற செயலியை கூட ‘பீம் ஆப்’ என பெயரிட்டார். பாரத ரத்னா வழங்கப்பட்டது கூட பாஜக கூட்டாட்சியில் இருந்தபோது தான். சட்டப்பேரவையில் கோவை குறித்து தொடர்ந்து பேசி வருகிறேன். பல்வேறு அமைச்சர்கள் கோவைக்கு பல திட்டங்கள் செய்ததாக கூறுகின்றனர். சாலைகளுக்கு ரூ.200 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம் என கூறுகின்றனர். ஆனால் சாலைகள் எவ்வளவு மோசமான நிலையில் உள்ளன என்று இருசக்கர வாகனத்தில் செல்பவர்களுக்கு மட்டும் தான் தெரியும்.

பாஜக ஜனநாயக ரீதியாக இயங்கும் கட்சி. பேரன் பிறந்து விட்டான், கொள்ளு பேரன் பிறந்தான் அதனால் எங்களுக்கு தலைவருக்கு பஞ்சமே இல்லை என்று சொல்லும் கட்சி அல்ல. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை மிக சிறப்பாக செயல்பட்டு இருக்கிறார். தனி முத்திரையை பதித்து இருக்கிறார். புதிய தலைவர் அதிமுக காலத்தில் சட்டப்பேரவை உறுப்பினராகவும் அமைச்சராகவும் நல்ல பங்களிப்பை கொடுத்தவர். நிறைய விஷயங்களை கற்றுக் கொள்ள முடியும், நல்ல முறையில் வழிநடத்துவார் என்ற நம்பிக்கை உள்ளது.

தென்னிந்தியாவில் இருந்து இந்தி தெரியாத எனக்கு, மகளிர் அணியின் தேசிய தலைவராக பொறுப்பு வழங்கியிருக்கிறது. கட்சியில் பதவியே இல்லாமல் 30 ஆண்டுகளுக்கு மேல் உழைத்தவர்கள் எல்லாம் உள்ளனர். சரியான நேரத்தில் கட்சி, அவர்களுக்கு பொறுப்பு வழங்கும். கட்சி வளர்ந்து கொண்டு இருக்கிறது என்பதை பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. முதலில் பாஜக அதிமுக கூட்டணியே அமையாது என்று பேசினர். மத்திய அமைச்சர் அமித்ஷா வழிகாட்டுதல்படி, அமைக்கப்பட்டு உள்ள இந்த கூட்டணி மிகச் சிறப்பாக செயல்படும்.

இக்கூட்டணி திமுக அரசை வீட்டுக்கு அனுப்புவது என்ற ஒற்றை குறிக்கோளோடு செயல்படுகிறது. கூட்டணியில் எந்த பிரச்சினையும் ஏற்படாது. தொகுதி வளர்ச்சிக்கு சட்டப்பேரவையில் நான் பேசிய வீடியோவை கொடுங்கள் என எத்தனையோ முறை கேட்டுவிட்டேன். ஆனால் அதைகூட கொடுக்கவில்லை. நான் பேசும் வீடியோவை எடிட் செய்யும் எடிட்டருக்கு ஆஸ்கார் அவார்ட் தான் கொடுக்க வேண்டும். பேரவை தலைவரின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை. அண்ணாமலை தனிப்பட்ட காரணங்களுக்காக, உத்தரகண்ட் சென்றுள்ளார். மாநிலத் தலைவர் கோவை வரும்போது அவருடன் நிச்சயம் வருவார்.” என்று அவர் கூறினார்.



டாக்டர் அம்பேத்கர் 134வது பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் தெற்கு பகுதி 55வது வார்டு சார்பாக சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய தாம்பரம் மாநகராட்சி 56வது மாமன்ற உறுப்பினர் எஸ்.சேகர் பி ஏ எம் சி பகுதி செயலாளர் அவர்கள் வழிகாட்டுதலின்படி பகுதி கழக துணைச் செயலாளர் 55வது மாமன்ற உறுப்பினர் புகழேந்தி மரியாதை செலுத்தினார் உடன் பகுதி இளைஞரணி ஓம் பிரகாஷ் மற்றும் 56வது வட்டச் செயலாளர் சுரேஷ்,55வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.கணேசன், மேல அமைப்பு பிரதிநிதி குமரவேல், 56வது விமல் மற்றும் இளைஞர் அணி குமரன் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி பி.எஸ்.விஜய் ஆனந்த், 55வது வட்ட இளைஞர் அணி மோகன் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்றினர்..

# பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் 4வது மண்டல குழு தலைவர் ஏற்பாட்டில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா

பெருங்களத்தூர் ஏப்.15

செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர், திமுக தலைவர் தளபதி ஆணைக்கிணங்க பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் 4வது மண்டல குழு தலைவருமான டி.காமராஜ் அவர்கள் தலைமையில் 54வது வார்டு மூகாம்பிகை நகர் எஸ்.ஜி கருணாகரன், 52வது வார்டு லட்சுமிபுரம் எல்.பெரியநாயகம் மற்றும் விஜயன், 53 வது வார்டு குளாங்கரை பேருந்து நிலையம் அருகில் மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, 60வது வார்டு காந்தி ரோடு சந்திப்பு ஆர்.சஞ்சீவி, 51வது வார்டு காந்தி ரோடு ஸ்ரீதர் குமார் என்கின்ற பாபு, ஐம்பதாவது வார்டு காந்தி ரோடு 3வது தெரு சந்திப்பு ஆர்.ஜீவன், 33வது வார்டு தாசில்தார் அலுவலகம் அருகில் எம்.வினோத், 49 வது வார்டு ஜிஎஸ்டி ரோடு ரயில் நிலையம் மற்றும் சண்முகர் ரோடு மாமன்ற உறுப்பினர் டி.காமராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது இதில்



சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும் தாம்பரம் மாநகர செயலாளருமான எஸ்.ஆர்.ராஜா,தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நீர் மோர், ரோஸ்மில்க், இளநீர், பழங்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார் இதில் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

# தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு பவனி

தேவகோட்டை, ஏப்,15

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு பவனி பங்குத் தந்தை வின்சென்ட் அமல் ராஜ் தலைமையில் நடைபெற்றது. இராம் நகர் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் அருள்பணி ஆரோக்கியசாமி,அருள்பணி தாமஸ் மற்றும் திருத்தொண்டர் சேவியர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இராம்நகர் ஜோசப் நடுநிலைப்பள்ளியில் பவனி தொடங்கி இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் முடிவடைந்தது. இதில் கிறிஸ்தவர்கள் குருத் தோலையை கையில் ஏந்தி ஊர்வலமாக வந்தனர்.



இதில் இராம்நகர் இறை மக்கள் மற்றும் கிளை கிராம இறைமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடு களை இராம்நகர் பங்கு பேரவையினர் செய்திருந்தனர்...

# காரைக்குடியில் கிறிஸ்தவர்களின் குருத்து ஞாயிறு ஊர்வலம்



காரைக்குடி ஏப்.15

உலகமெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் 40 நாட்கள் நோன்பிருந்து தவக்காலத்தை கடைப்பிடித்து வருகின்றனர்.தவக்காலத்தில் புனித வாரமாக கருதப்படும் இறுதி வாரத்தின் முதல் நாள் குருத்தோலை ஞாயிறாக கொண்டாடப்பட்டு வருகிறது.இயேசு ஜெருசெலம் நகருக்கு சென்றபோது அவ்வூர் மக்கள் இயேசுவை வரவேற்கும் விதமாக கையில் குருத்தோலை ஏந்தி தாவீது மகனுக்கு ஓசானா எனக் கூறி வரவேற்ற நிகழ்வு குருந்தோலை ஞாயிராக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தூய சகாய அன்னை ஆலயத்தின் குருத்தோலை ஞாயிறு ஊர்வலம், காரைக்குடி அம்பேத்கர் சிலையிலிருந்து. தொடங்கி தூய சகாய அன்னை ஆலயம் வரை நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கையில் குருத்தோலையை ஏந்தி தாவீது குமாரனுக்கு ஓசானா என்ற பாடல் பாடி ஊர்வலமாக சென்றனர்.அதன் பின்பு நடைபெற்ற திருப்பலியை பங்குத்தந்தை அருள் முனைவர் மி. சார்லஸ் அடிகளார் மற்றும் உதவி பங்குத்தந்தை அருட்பணி டேனியல் திலீபன் நிறைவேற்றினர்.இதில் திரளான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பங்கேற்று இறைவனின் ஆசிர் பெற்று சென்றனர்.

இதனைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் ரத்த தான முகாம் நடைபெற்றது. என்பது குறிப்பிடத்தக்கது.

# பள்ளிக்கரணை ஜெருசலேம் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

பள்ளிக்கரணை ஏப்15

சென்னை பள்ளிக்கரணையில் ஜெருசலேம் பொறியியல் கல்லூரி தனது 25வது மற்றும் 26வது பட்டமளிப்பு தின விழா கல்லூரி வளாகத்தில் கல்வி குழும தலைவர் டாக்டர் எம். மாலா தலைமை நடைப்பெற்றது. கல்வி குழும செயலாளர் மணிகண்டன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் டாக்டர் ரமேஷ் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.




அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலின் (AICTE) தலைவர் பேராசிரியர் முனைவர் டி.ஜி. சீத்தாராம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், பெண் பட்டதாரிகளின் சாதனைகள் குறிப்பிட்டு பேசிய அவர், பட்டங்களை வாங்குவதை முடிவாகளாக எடுத்து கொள்ளாமல், வாய்ப்புகள் நிறைந்த ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக மாற்றவேண்டும் என்றார்.

பொறியியல் பட்டதாரிகள் தரமான கல்வி, துறைகளுக்கு இடையேயான கற்றல் மற்றும் முழுமையான வளர்ச்சியின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளவேண்டும். தற்போது வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு கருவிகளின் எழுச்சி மற்றும் டிஜிட்டல் மாற்றம் உள்ளிட்ட விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்களை மாணவர்கள் கற்றறிந்து திறமைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இந்த விழாவின் போது பல்வேறு துறைகளைச் சேர்ந்த மொத்தம் 639 பட்டதாரிகள் தங்கள் பட்டங்களைப் பெற்றனர்.

இதில் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் ராமகிருஷ்ணன் மற்றும் பேராசியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் என ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

# ஆயக்குடியில் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு சுபிக்ஷா நிர்வாகம் சார்பாக இலவச மருத்துவ முகாம் நிகழ்ச்சி

பழனி ஏப் 15

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடியில் சுபிக்ஷா திருமண மண்டபத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு சுபிக்ஷா நிர்வாகம் மற்றும் எக்ஸ்சல் காப்பியர் சிஸ்டம் நிர்வாகம் மற்றும் பெரியார் மருந்தியல் கல்லூரிமற்றும் ஹர்ஷமித்ரா மருத்துவமனை நிர்வாகம் ஆகியவை இணைந்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம் நிகழ்ச்சி நடைபெற்றன.

இந்நிகழ்வில் எக்ஸெல் காப்பியர் சிஸ்டம் நிறுவனர் பிச்சைமுத்து சுபிக்ஷா நிர்வாகம் சமா பிச்சைமுத்து வரவேற்புரையாக கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன், சின்னத்துரை, பொற்செழியன், மற்றும் சிறப்பு கருத்துரையாக ஹர்ஷமித்திரா மருத்துவமனை சிவா அருணாச்சலம் பெரியார் மருந்தியல் கல்லூரி முதல்வர் செந்தாமரை மற்றும்




அமரபூண்டி சின்ராஜ், மரத்தடி மையம் ராமமூர்த்தி, சிறப்பு மருத்துவர்கள் புற்றுநோய் மருத்துவர். சௌமியா, மருத்துவர் மாணுஸ்ரீ மற்றும் இந்நிகழ்வில் மனோகரன், மாரிமுத்து, கிப்டான், பாலன், ஆறுமுகம், பொன்ராஜ், ஜான்சிராணி, பத்மநாபன், தர்மராஜ், டைகர்வேலு, ராகுல், பிரகாஷ், மாயவன், ஹன்சிராம், சுப்பிரமணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டு மருத்துவ முகாம் நிகழ்ச்சி நடைபெற்றன.

மேலும் இந்நிகழ்வில் பொது மக்களுக்கு இலவச மாக சக்கரை அளவு பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, மார்பக புற்றுநோய் பரிசோதனை, கர்ப்பவாய் புற்றுநோய் பரிசோதனை, குடல் புண் பரிசோதனை, மற்றும் பொது மருத்துவம் உள்ளிட்டவைகள் நடைபெற்றன. தொடர்ந்து பெரியார் மருந்தியல் கல்லூரி சார்பாக அனைவருக்கும் இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டு மருத்துவ பரிசோதனை முகாம் நிகழ்ச்சி நடைபெற்றன.

# குவாரி குத்தகை கோரும் விண்ணப்பதாரர்கள் சுரங்க நிலுவை தொகை சான்றிதழ் பெற விண்ணப்பிக்கலாம்! சிவகங்கை ஆட்சியர் தகவல்

சிவகங்கை ஏப்.15

சிவகங்கை மாவட்டத்தில் குவாரி குத்தகை கோரும் விண்ணப்பதாரர்கள் மற்றும் சுரங்க நிலுவை தொகை சான்றிதழ் (Mining Dues clearance Certificate) கோரும் விண்ணப்பதாரர்கள் வருகின்ற 28.04.2025 முதல் mimas.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக, உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

2025-2026ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில், குவாரி குத்தகை உரிமம் கோரும் விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்க ஏதுவாக இணையவழி சேவையினை மாநிலம்



முழுவதும் படிப்படியாக செயல்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959 விதி எண்கள் 3,7,8,8-C, 12(2-A)(a), 19(1), 19(2), 19-A.36-F, 43(3), 43(5) ஆகியவைகளின் கீழ், குவாரி குத்தகை கோரும் விண்ணப்பங்கள் மற்றும் சுரங்க நிலுவை தொகை சான்றிதழ் (Mining Dues clearance Certificate) கோரும் விண்ணப்பங்கள் ஆகியவைகளை வருகின்ற 28.04.2025 முதல் mimas.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக மட்டுமே சமர்ப்பித்திடல் வேண்டும். அவ்வாறாக, குவாரி குத்தகை அனுமதி உரிமம் கோரும் விண்ணப்பத்தாரர்கள் இணையதளத்தில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்தவன் மூலம் எளிதாகவும், விரைவாகவும் குத்தகை உரிமம் அனுமதி பெற்றுக் கொள்ளலாம்.

அதுமட்டுமன்றி, குவாரி குத்தகை அனுமதி உரிமம் பெற்ற குத்தகைதாரர்கள் அனுமதி சீட்டினை (online e-permits), Mimas.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் அனுமதி கோரி நாளை முதல் 15.04.2025 முதல் இசைவாணை சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்.

குத்தகைதாரர்கள் குத்தகை உரிமம் வழங்கப்பட்ட பகுதியில் விதிகளுக்குட்பட்டு குவாரிப்பணி மேற்கொள்ளவும், வாகன ஓட்டுநர்கள் குவாரியிலிருந்து கனிமங்கள் ஏற்றிச் செல்லும்போது உரிய அனுமதிசீட்டும், கிரஷரிலிருந்து எம்சாண்ட், ஜல்லி, சிப்ஸ் போன்ற கனிமங்கள் ஏற்றிச்செல்லும் போது உரிய போக்குவரத்து நடைசீட்டு பெற்று கனிமம் கொண்டு செல்ல வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்டுள்ளவைகளை வாகன தணிக்கையின் போது வைத்திருத்தல் வேண்டும்.

மேலும், உரிய அனுமதியில்லாமல் குவாரிப்பணி மேற்கொள்வது, கனிமங்கள் எடுத்துச் செல்வது கண்டறியப்படின் அரசு விதிகளின்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# லயன்ஸ் சங்கத்துடன் இணைந்து ரயில் பயணிகளுக்கு மஞ்சள் துணிப்பைகளை வழங்கிய காரைக்குடி அழகப்பா கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்

சிவகங்கை, ஏப்.15

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சிட்டி அரிமா சங்கம் காரைக்குடி சிட்டி லியோ சங்கம் இணைந்து, காரைக்குடி அழகப்பா அரசு மற்றும் கலைக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுடன் கிரீன் ரீடா அமைப்பும் இணைந்து தூய்மை பாரத திட்டத்தின் கீழ் காரைக்குடி ரயில்வே சந்திப்பு நிலையத்தில் ரயில்வே நிலையத்தின் நடைபாதை மற்றும் இருப்புப் பாதை வழித்தடங்களில் தூய்மை பணியை காரைக்குடி சிட்டி அரிமா சங்கத்தின் தலைவர் பழனிவேல் தலைமையில் மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று 8.30 மணியளவில் ரயில்வே நிலையத்தில் இருந்த வருகை தந்த அனைத்து பயணிகளுக்கும்




பொதுமக்களுக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் சிவகங்கை மாவட்ட நிர்வாகம் வழங்கிய மஞ்சள் துணிப்பைகளை 250 பயனாளிகளுக்கு வழங்கினர்., இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் அழகப்பா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களும்.,கிரீன் ரீட்டா அமைப்பு உறுப்பினர்களும்.,

காரைக்குடி சிட்டி லியோ மற்றும் அரிமா உறுப்பினர்களும் அழகப்பா அரசு கலைக் கல்லூரி பேராசிரியை சித்ராதேவி.,சிட்டி லியோ சங்க செயலாளர் மனோஜ்.,பொருளாளர் கேசவ்.,ஒருங்கிணைப்பாளர்கள் ரஞ்சித் குமார்.,வசந்த் போஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் கம்பம் நகராட்சி அலுவலகத்தில் அம்பேத்கரின் 135 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன தலைமையில் துணை தலைவர் சுனோதா செல்வக்குமார் முன்னிலையில் மலர்தூவி, இனிப்பு வழங்கி சமத்துவ உறுதிமொழிஎடுத்துக்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சியில், சுகாதார அலுவலர் அரசகுமார், நகர் மன்ற உறுப்பினர்கள் சுல்தான் சல்மான் பார்சி, எஸ்.டி. மணிகண்டன்,ஏ.விருமாண்டி, ஏ.சாதிக் அலி, விஜயலட்சுமி, ரோஜாரமணி, வளர்மதி, அன்பு குமாரி, அபிராமி, சாகிதா பானு நகராட்சி அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் சமத்துவ நாள் விழாவை முன்னிட்டு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்று பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக 1164 பயனாளிகளுக்கு ரூ.8.27 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் மாநகராட்சி மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் சட்ட மேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 135வது பிறந்த நாளை தாம்பரம் பேருந்து நிலையம் மற்றும் முடிச்சு ரோடு கிருஷ்ணா நகரில் அருகில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ அவர்களின் திருக்கரங்களால் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இதில் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், எஸ்.இந்திரன் கலந்து கொண்டனர் உடன் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்..

## தாம்பரத்தில் அம்பேத்கர் சிலைக்கு விசிகவினர் மாலை அணிவித்து மரியாதை



தாம்பரம் ஏப்.15

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம்பேருந்துநிலையத்தில் அம்பேத்கர் 134 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு விசிக சார்பில் மாலை அணிவித்து மாரியாதை செலுத்தப்பட்டது. விடுதலை சிறுத்தை கட்சியின் தாம்பரம் மாநகர செயலாளர் எபிநேசர் சாமுவேல் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட விசிகவினர் அலங்கரிக்கப்பட்ட அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மாரியதை செலுத்தினர்.

அதன்பின்னர் சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு விசிகவினர் மலர்தூவிமரியாதை செய்தனர். இதனையடுத்து அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு சமத்துவநாள் உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் நகர செயலலர் ராமனுஜம், சமூக ஊடக பிரிவு மாநில துணை செயலாளர் கதிரவன், தொகுதி செயலாளர் ரஞ்சன், தொகுதி பொறுப்பாளர் செல் சேகர் உள்ளிட்ட விசிகவினர் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மானாமதுரையில் கோலாகலமாக தொடங்கிய சித்திரை திருவிழா



சிவகங்கை, ஏப்.15

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்றில் சித்திரை திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். அருள்மிகு ஆனந்தவள்ளி சோமநாதர் மற்றும் வீர அழகர் கோயில்களில் நடைபெறும் இவ்விழாவை முன்னிட்டு மே1 ம் தேதி கொடியேற்றத்துடன் சித்திரை திருவிழா துவங்குகிறது.மே8 ல் திருக்கல்யாணம், மே9 ம் தேதி தேரோட்டம், மே12ல் வீர அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெறும். திருவிழாவிற்காக வைகை ஆற்றை சுத்தம் செய்ய வேண்டும் என பக்தர்கள் வலியுறுத்தினர். இதையடுத்து மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையில் சுத்தம் செய்யும் பணிக்காக பூமி பூஜை செய்யப்பட்டது நேற்று பொக்லைன் இயந்திரம் மூலம் வைகை ஆற்றை சுத்தம் செய்யும் பணி துவங்கியுள்ளது. இப்பணிக்கு பின் திருவிழாவின் போது நகராட்சி சார்பில் வைகை ஆற்றில் குடிநீர், மின்விளக்கு, தற்காலிக கழிப்பறை வசதிகள் செய்துதரப்படும் என நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கீழக்கோட்டையில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு





காளையார் கோவில் ஏப்.15

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் டாக்டர் பாபாசாஹேப் அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு விழா நடைபெற்றது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியைமீனாட்சி முன்னிலை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் வரவேற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி அண்ணல் அம்பேத்காரின் வாழ்க்கை வரலாற்றையும் கொடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காகவும் சமத்துவத்திற்காகவும் இந்திய திருநாட்டிற்காக அவர் வகுத்துக் கொடுத்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் சரத்துக்களையும் கூறி சமத்துவ நாள் உறுதிமொழி வாசிக்க ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். ஆசிரியை வாசுகி நன்றி கூறினார். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. கணினி பயிற்றுநர் வித்யா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

## காளையார்கோவில் புனித அருளானந்தர் ஆலயத்தில் ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு கொண்டாட்டம்



காளையார் கோவில் ஏப்.15

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் ஆலயத்தில் ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு கோலகலமாக குருத்தோலைகளை கையில் ஏந்தி ஆர்பரித்து கொண்டாடப்பட்டது. ஆலய பங்குத்தந்தை சேசு உதவி பங்குத்தந்தை பாஸ்டின் பாரதி தலைமையில் சகாயராணி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் இருந்து இறைமக்கள் அனைவரும் குருத்தோலைகளை கையிலேந்தி தாவீதின் மகனுக்கு ஓசன்னா முழக்கங்களோடும் பாடல்கள் பாடியும் வீரப்பயணம் மேற்கொண்டனர்.

ஈராயிரம் ஆண்டுகளாய் விடுதலைக்காய் வாழ்வின் விடியலுக்காய் ஏழை எளிய மக்களுக்கு நம்பிக்கையும் புத்துயிரையும் கொடுப்பதாகவும் இந்த பயணம் அமைந்தது. பீடச்சிறுவர்கள் கையில் சிலுவை, விளக்குகள் ஏந்தியவர்களாய் முன்சென்றார்கள். தாவீதின் மகனுக்கு ஓசன்னா என்ற முழக்கத்தோடு குருத்தோலைகளை கையிலேந்தி இறைமக்கள் பவனியாக புனித அருளானந்தர் ஆலயத்தை வந்தடைந்தனர். தொடர்ந்து திருப்பலியில் 2000க்கு மேற்பட்ட இறைமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இன்றைய நிகழ்வுகளை புனித வின்செண்ட் தே பவுல் சபை புனித அருளானந்தர் கிளைச் சபையின் தலைவர் ஆரோக்கியசாமி செயலாளர் ஜோசப் பொருளாளர் பால் ஜோசப் மற்றும் உறுப்பினர்கள் தன்னார்வலர்கள் வேதியர் வேளாங்கண்ணி கோவில் பிள்ளை இருதயராஜ் மருத்துவமனை நிறுவனர் சேகர் அருட்சகோதரிகள் ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர். முன்னாள் ராணுவத்தினர் சிறப்பாக பவனியை ஒழுங்குபடுத்தினர். இந்த வாரம் புனித வாரமாக கிறிஸ்தவர்களால் அனுசரிக்கப்படுகிறது.

## ஸ்ரீ முத்தாலம்மன் கோயில் பால்குட பெருவிழாவில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன்






பரமக்குடி.ஏப்14

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீமுத்தாலம்மன் கோயிலில் பங்குனி திருவிழா ஏப் 03 ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. நேற்றய முன் தினம் அக்னிச்சட்டி மற்றும் தேரோட்டம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

அதனையொட்டி நேற்று 11ம் நாள் நிறைவு நிகழ்ச்சியாக பால்குடம் வைபவம் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அதிகாலை 4 மணி முதல் 12 மணி வரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர். வைகை ஆற்றங்கரையில் இருந்து துவங்கி நகரின் முக்கிய வீதிகள் வழியாக பால் குடத்தை சுமந்தபடி வீதி உலா வந்து கோவிலை வந்தடைந்தனர்.

இவ்விழாவை காண சுற்றுவட்டார பகுதியில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்து பால்குட நிகழ்ச்சியை கண்டுகளித்தனர். பின் பக்தர்கள் சுமந்து வந்த பால் மூலம் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது. விழாவை முன்னிட்டு 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்..







சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை இராம்நகர் ஜோசப் நடுநிலைப்பள்ளியில் இரத்ததானம் முகாம் இராம்நகர்.பங்குத்தந்தை வின்சென்ட் அமல்ராஜ் அவர்களின் வழிகாட்டுதலின்படி பிரிட்டோ இளையோர் இயக்கம் நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் இராம்நகர் புனித ஜோசப் நடுநிலைப்பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.30 பேர் தன்னார்வமாக முன்வந்து 30 யூனிட் இரத்தம் கொடுத்தனர்.காரைக்குடி மற்றும் கண்ணங்குடி அரசு பொது மருத்துவமனைகளில் இருந்து மருத்துவக்குழு வந்து சிறப்பாக சேவை புரிந்தனர்.

## அலங்காநல்லூரில் சட்டமேதை அம்பேத்கர் உருவச்சிலைக்கு அரசியல் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை



அலங்காநல்லூர், ஏப்.15

டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளையொட்டி மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே பெரியஊர்சேரி கிராமத்தில் உள்ள அவரது முழு திருவுருவ சிலைக்கு சோழவந்தான் எம்.எல்.ஏ வெங்கடேசன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், தனசேகர், பேரூர் செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், வாடிப்பட்டி பால்பாண்டியன், துணை தலைவர்கள் சுவாமி நாதன், கார்த்திக், ஒன்றிய துணைச் செயலாளர் அருண், பொருளாளர் சுந்தர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, செந்தில்குமார், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் சிந்தனை வளவன் தலைமையில் ஒன்றிய செயலாளர் பாலமுருகன், தொண்டரணி அமைப்பாளர் சித்தன் முன்னிலையில் சிலைக்கு மாலை அணிவித்து கட்சியின் கொடியேற்றினர். தொடர்ந்து நாம் தமிழர் கட்சி சார்பில் சோழவந்தான் தொகுதி செயலாளர் சக்கரபாணி தலைமையில் தொகுதி தலைவர் சங்கிலி முருகன் பொருளாளர் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்து சிலைக்கு மாலை அணிவித்தனர். அதிமுக சார்பில் ஒன்றிய எம்ஜிஆர் இளைஞரணி இணை செயலாளர் செந்தில்குமார், ஒன்றிய கவுன்சிலர் ரேவதி, விவசாய அணி துணை செயலாளர் பாலமுருகன், நிர்வாகிகள் கணேசன், நடராஜன், மனோகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாக பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலைக்கு திமுக பெரியகுளம் நகர் செயலாளர் முகமது இலியாஸ் தலைமையில் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்கம் செலுத்தினர். இந்நிகழ்வில் பெரியகுளம் நகராட்சி நகர்மன்ற தலைவர் சுமிதா சிவக்குமார், தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ், தாமரைக்குளம் பேரூராட்சி தலைவர் பால்பாண்டி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்திக், நகர சுற்றுச்சூழல் அணி பழனிக்குமார், நகர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அஇஅதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி ஆணைக்கிணங்க பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாக பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலைக்கு அதிமுக பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன் தலைமையில் தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர், ஒன்றிய கழக செயலாளர்கள் அன்ன பிரகாஷ், ராஜகுரு ஆகியோர் முன்னிலையில் அஇஅதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்கம் செலுத்தினர்.




திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பாக டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்த தின விழா ,வத்தலக்குண்டு கிளை நூலகம் முன்பாக சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு வத்தலக்குண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க கிளை செயலாளர் லட்சுமணன், மாவட்ட தமுஎகச வின் மாவட்ட செயலாளர் கவிவாணன் சிறப்புரையாற்றினனர். கிளை தலைவர் ரமேஷ்பாண்டியன் நன்றி கூறினார். பாடகர் கண்ணன், நாக பாண்டி சோனை விஜயவேல் செந்தில்- அண்ணாமலை மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள முத்துசாமி பிரதர்ஸ் இண்டஸ்டிரியல் காம்பளக்ஸில் கோவை,திருப்பூர், ஈரோடு,நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயனைடையும் வகையில் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுதுறையின் புதிய கிளை அச்சகத்தை திறந்துவைத்து பெயர் மாற்றத்திற்காக விண்ணபித்த நபர்களுக்கு விண்ணப்பங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.உடன் ஆணையர் எழுதுபொருள் மற்றும் அச்சு துறை வெ.ஷோபனா, மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகர மேயர் ந.தினேஷ்குமார், துனை மேயர் ரா.பாலசுப்பிரமணியம்,திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல தலைவர் இல.பத்மநாபன், துணை பணி மேலாளர் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.





திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே கள்ளிமந்தயத்தில் சட்ட மாமேதை,புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின்134 வது அகவை தினத்தை முன்னிட்டு தலித் விடுதலை இயக்கம் மாநில தலைவர் கே. ராமர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ் புலிகள் கட்சியின் திண்டுக்கல் மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் ப.செல்வகுமார் அருந்தமிழர் விடுதலை இயக்கத்தின் மாநில தலைவர் விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## கரூரில் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டி அமைச்சர் செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்



கரூர், ஏப்.15

கரூரில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டியை அமைச்சர் செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

விளையாட்டு போட்டிகள் கரூர் மாவட்டதி.மு.க.சார்பில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்டத்தில் மொத்தம் 250 இடங்களில் விளையாட்டு போட்டிகள் தடைபெற்றன. இதையடுத்து இந்த போட்டிகளில் முதல் இடம் பிடித்தவர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டி கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதனை மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைலாஜி தொடங்கி வைத்தார். இதில் 100 மீட்டர் ஓட்டம், பாட்டிலில் நீர் நிரப்புதல், வட்டம் சைக்கிளில் மெதுவாக செல்லுதல், மியூசிக் சேர், கயிறு இழுத்தல், பானை உடைத்தல், உள்ளிட்ட போட்டிகள் ஆண்கள், பெண்கள் என தனித்தனியாக நடைபெற்றது. பின்னர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரு.2 லட்சத்து 25 ஆயிரத்தில் பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன. இதில், எம். எல்.ஏ.க்கள் மாணிக்கம் இளங்கோ, சிவகாமசுந்தரி மாநகராட்சி மேயர் கவிதா, துணை மேயர் தாரணி சரவணன், மாநகர செயலாளர் கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் கணேசன் கோல்ட் ஸ்பாட் ராஜா, ஜோதிபாஸ், வி.ஜி.எஸ். குமார் ஒன்றிய செயலாளர்கள் எம் ஆர் ரகுநாதன் கோயம்பள்ளி பாஸ்கர், மணிகண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் அருகே முட்டை அமிலம் குறித்து விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கம்



பெரியகுளம், ஏப்.15

தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டாரம், கள்ளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பாண்டியன் தனது விவசாய நிலங்களில் கத்தரிக்காய், கொக்கோ, மிளகு மற்றும் வாழை போன்ற பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வருகிறார்.இந்த நிலையில், பசுமை வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில், செம்பட்டியைச் சேர்ந்த ஆர்.வி.எஸ். பத்மாவதி தோட்டக்கலைக் கல்லூரியின் மாணவிகள் ஷை ரஞ்சனி, ரசிகப்பிரியா, ரெனிடா ஷாரன், ரோஷினி, செமிதா, ஷீபா மற்றும் சுபானு ஸ்ரீ ஷை கிராமப்புற அனுபவத்திட்டத்தின் கீழ் பாண்டியனை நேரில் சந்தித்து முட்டை அமிலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.முட்டை அமிலம் செடிகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், நோய்கள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த உதவுவதாகவும், இயற்கை முறையில் பாதுகாப்பான பயிர்சாகுபடியை மேற்கொள்ள இது பெரிதும் பயனுள்ளதாகவும் மாணவிகள் விளக்கினர். மேலும், அந்த அமிலத்தின் பயன்பாடுகள், தயாரிப்பு முறை மற்றும் பயிர்களில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் விரிவாக விவசாயிக்கு வழிகாட்டியதுடன், பயன்பாட்டு முறைகளையும் நேரடியாகக் காண்பித்து விளக்கமளித்தனர்.இந்நிகழ்வு, விவசாயத்தில் புதிய நுட்பங்களை அறிந்து பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது என விவசாயி பாண்டியன் தெரிவித்துள்ளார்.

## பெரியகுளம் அருகே சில்வார்பட்டி கிளை நூலகத்தின் கூடுதல் கட்டிடம் திறப்பு விழா



பெரியகுளம், ஏப்.15

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே சில்வார்பட்டியில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிளை நூலகத்தின் இணைப்பு கூடுதல் புதிய கட்டிடத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நூலக வாசகர் வட்டம் பொறுப்பாளர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்து பார்வையிட்டனர். இந்நிகழ்வில் கிளை நூலகர் முருகானந்தம், நல்நூலகர்கள் சவடமுத்து, குமரன், அரசு ஒப்பந்ததாரர் மரியதாஸ் மற்றும் போட்டித்தேர்வு மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தேனி மாவட்டத்தில் இதேபோன்று 19 நூலகத்தின் இணைப்பு கூடுதல் கட்டிடங்கள் திறக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு நூலகர்கள் மற்றும் வாசகர் வட்டம், போட்டித் தேர்வு மாணவர்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றனர்.

## தாராபுரத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டிடங்களை இடிக்க சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு!



தாராபுரம், ஏப்.15

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பேருந்து நிலையம் அருகே உள்ள தேன்மலர் தனியார் மேல்நிலைப்பள்ளி திட்ட அனுமதியின்றியும் சட்டவிரோதமாக கட்டப் பட்டுள்ள கட்டுமானங்களையும் இடிக்கக்கோரி அப் பகுதியைச் சேர்ந்த முருகானந்தம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் திருந்தார்.இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம்,

கே.ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு,இந்த பள்ளியில் நகரமைப்புத் துறை உதவி இயக்குனர் மேற்கொண்ட ஆய்வில் அனுமதியின்றி கட்டுமானங்கள் கட்டப் பட்டிருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.எனவே திட்டம் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள அந்த கட்டு மானங்களை இடிக்க பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,

என உத்தரவிட்டனர். அப்போது பள்ளி நிர்வாக தரப்பில், மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் நடப்பு கல்வியாண்டு முடியும் வரை கால அவகாசம் வழங்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனையேற்ற நீதிபதிகள், மாணவர்களின் நலன் கருதி வரும் ஏப்ரல் மாதத்தில் வகுப்புகள் முடிந்ததும் மே மாதத்தில் இடிக்க உத்தரவிட்டனர். குறிப்பாக அடுத்த 2026 கல்வியாண்டு தொடங்கும் முன்பாக அந்த சட்டவிரோத கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்த வேண்டும்,என மாவட்ட நிர்வாகத்துக்கு நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161